**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்**
**அவர்கள் அருளியது**

# கபாடபுரத்துக் கருவூறாரின்
# தரு வாசகம்



**இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம், 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்.**

## இந்து இலக்கியக் கழக வெளியீடு

**மெய்யான இந்துமத ஆண்டு 43,73,117 ஐப்பசி மாதம்.**

காணிக்கை: ரூ 10/-

# உள்ளுறை

1. **கபாடபுரத்துக் கருவூறாரின் தரு வாசகம்.**

2. **கருத்துப் பரிமாற்றச் செயல்நிலை விளக்கப் பரிந்துரைத் திருமடல்.** (பிறம்மயோகி திரு MSR மாரியப்பன் அவர்களுக்கு 1987இல் குருதேவர் எழுதிய நெடிய அஞ்சல்.)

3. **அருளார்ந்த அறிவுரை.** (புதுக்கோட்டை அடியான்கள் இருவருக்காக 1982இல் குருதேவர் எழுதிய அஞ்சலில் இருந்து எடுக்கப் பட்ட குருபாரம்பரிய வாசகம்.)

---

அறிவுக் குறைவுடையவனும், ஆற்றலற்றவனும் கூட அருளாளனால் கடைத்தேறி உரிய நிலைகள் பெற முடியும். ஆனால், நம்பிக்கையற்றவனும், சந்தேகக்காரனும் தேறவே முடியாது! முடியவே முடியாது!

<u>பேரறிஞர் அண்ணா</u>வின் வாழ்வியல்களும், வாழ்வியல் சாதனைகளும், போதனைகளும், 'தமிழின விடுதலைப் போர்ப் பரணிகளாகவும், தமிழின விடுதலைக்காகப் போரிடும் மாவீரர்களைத் தயாரிக்கும் பாடிவீடுகளாகவும், போர்க்களப் பாசறைகளாகவும்' என்றென்றும் நிலைத்திருக்கக் கூடிய தன்மை பெற்றிருந்தும்; அவற்றைச் சுயநலவெறி பிடித்த பேராசைக்காரர்கள், தமிழின விரோதிகளின் சூழ்ச்சித் திட்டங்களுக்கு ஒத்துழைத்து கடலில் கரைத்த பெருங்காயமாக்கி விட்டார்கள்.

# கபாடபுரத்துக் கருவூரரின்

# தரு வாசகம்

I. The Scheme: DEC

D = Divination, E = Explosion, C = Consolidation.

அருளாளராக்குதல், வெடியெனப் பரவுதல், பத்தியாளர்களைத் திரட்டி ஒருமுகப் படுத்தல்.

II. Religious Observance [Training] Centre:-

சமய வாழ்வியல் பயிற்சி மையம்.

III. D.E.C. Programme:-

அருளூறு பூசைத் திருக்குழு,
அருள் வழங்கு பூசை இல்லம்,
அருட்பணி விரிவாக்கத் திட்ட நிலையம்,
பூசை இல்லம் 'சித்தி வளாகம்'.

1) யாரிடம் பழகினாலும் உண்மையோடு பழகி அருளுலக அநுபவங்களை அறிவியுங்கள்.

2) பிறரின் கவலையும், தொல்லையும், துன்பமும் கண்டு இரங்கி அருட்சத்தி பெற வழிகாட்டுங்கள்.

3) மதமறுப்பாலும், வெறுப்பாலும் ஏற்படும் இழப்புக்களை விளக்கி இறைநெறிக்கு வழிப்படுத்துங்கள்.

4) பயனில்லாத பழக்கவழக்க நம்பிக்கைகளை ஒழித்துப் பயனடையப் பத்தர்க்கு ஆச்சாரியாராகுங்கள்.

5) ஆபாசக் கற்பனைகள் அகற்றி உண்மை ஆண்டவர்களை அறிந்திட அருளுரை ஆற்றுங்கள்.

6) அருளுலக நண்பர்களாக, அதிகாரம் செய்யாமல், தோழராகத் துணையிருந்து உதவுங்கள்.

7) ஆண்டானாக இருந்து அருள் வழங்குவதை விடத் தொண்டனாக இருந்து அருளுலகைப் புரியவையுங்கள்.

8) மூத்தோரை மதித்துப் பேணுவதே முன்னோரான தெய்வங்களை வழிபடுவது என்பதை விளக்குவதாக வாழுங்கள்.

9) அனைவரிடமும் அறிமுகமாகிடச் சித்தர் நெறியை விளக்கியுரைத்துக் கருவறை ஊழியம் பெறுங்கள்.

10) ஈகையுடன் வாழ்வதே இறை வழிபாடு ஆதலால் நகையாடாதே! பகையாடாதே! உவகை புரிந்து வாழ்ந்திடு!

11) பிறர் கூறுவதைக் கேட்டுச் சிந்தித்துப் பதில் கூறுபவனே அருட்பணியாற்றும் சிறந்த அருளாளனாகிட முடியும்.

12) தான் நினைப்பதையே பேசுபவன் பிறரின் நிலையுணர்ந்து அருட்சத்திகளை வழங்கி இருளகற்றிட மாட்டான்.

13) தருவின் குளிர் நிழலில் இளைப்பாறுவது போல் துயருற்றோர் உனது கனிந்த அருளுரையால் அயர்வு நீங்கட்டும்.

14) வினாக்களை எழுப்பி விடை கேட்டுப் பிறர் நிலை விளங்கி அருட்பணி ஆற்றுபவனே உண்மையான அருளாளன்.

15) தெரியாததைத் தெரிந்ததாக நடிக்கும் பத்தன் அருளுலகின் ஒளி விளக்குகளை அணைத்து இருள் வளர்ப்பவனாவான்.

16) புரியாததைப் புரிந்ததாக எண்ணிச் செயல்படும் சித்தியாளன் மதவிரோதியையும், துரோகியையும் விடக் *கெட்டவன். [**கேடானவன்* - பாடவேறுபாடு உண்டு]

17) ஆன்மா, ஆவி, உயிர் விடுதலை பெற உன் அநுபவத்தை உண்மையாக உரைத்து வழிகாட்டு.

18) பிறரின் குறைகளை முறையாகக் கேட்டு நிறைவாக இறையருளை வழங்கிடு.

19) அருளுலகில் அதிகம் பேசாமல் அருளை அநுபவப் பொருளாக வழங்கிச் செயல்பட்டிடுக!

20) வினாவெழுப்பியும், வினாக்களுக்கு விடையளித்தும் அருளுலகில் உண்மைப் பணியாற்றிடு.

21) மொழி, இன, நாட்டுப் பற்றோடும்; உரிமை வேட்கையோடும் பண்பாட்டு நாட்டத்தோடு அருட்பணியாற்றிடு.

22) பொருளுலக வாதிகள் போல் சமய சமுதாய நல விரோதியாகவோ, துரோகியாகவோ அருளுலகில் செயல்படாதே.

23) மத மறுப்பும், வெறுப்பும்; போலிநிலை, கூலிநிலை, மானமிழந்த நிலை, தன்னம்பிக்கை நலிந்த நிலை முதலியனவே வளர்க்கும்.

24) பண, பதவி, அதிகார வெறி பிடித்த தன்னலக்காரர்களே அருளுலகில் இருள் வளர்க்கும் பொருளுலகவாதிகள்.

25) இயற்கைப் பண்பு நலன்களைக் குறைத்தும், மறைத்தும் நடிப்பவனே துரோக விரோதச் செயலுக்கு உரிய பொருளுலகவாதி.

26) எதையும் விற்றுச் சதைவாழ்வு வாழும் சல்லையனே அருளுலகத் தொல்லை தரும் பொருளுலகவாதி.

27) அருளாளன் மொழி, இன, நாட்டு உரிமைக்கும் பெருமைக்கும் வளம் நல்கி வலிவோடு செயல்பட்டிடட்டும்.

28) அருள் வேண்டுவோரின் அகநிலைக்கும், புறநிலைக்கும் தன்னை உரியவனுக்கி உணர்ந்தே அருட்பணியாற்றுக!

29) அருட்பணியாளன் வறட்டு வாதமோ, முரட்டுப் பிடிவாதமோ இன்றித் தெளிவான உண்மையோடு செயல்படுக.

30) அருட்பணியாளன் உரையாடல் கனிவும், துணிவும், பணிவும் நிறைந்து அருளோடு அமையட்டும்.

31) சித்தர்களின் வாக்குகளையும், வாசகங்களையுமே அருட்பணியாளன் தன்னுரையாக வழங்க வேண்டும்.

32) அருட்பணியாளன் சித்தர்களின் இலக்கியங்களையே அணையாச் சுடராக்கி அருளுலக இருளகற்ற வேண்டும்.

33) அருட்பணியாளன் வீணுன முரட்டுப் பிடிவாதங்களில் நிற்காமல் அவரவர் ஊழ்வினை, வினை, விதி, சூழ்வினை, ஆள்வினைப்படியே பத்தி, சத்தி, சித்தி, முத்தி, சித்துக்கள் ... அமையுமெனச் செயல்படட்டும்.

34) அருளாளன் தனது ஏட்டறிவும், பட்டறிவும் உண்மையென உணர்த்துவனவற்றை மட்டுமே வெளியிட வேண்டும்.

35) அருட்பணியாளன் பதினெண்சித்தர்களின் வாக்குகளையும், வாசகங்களையும் மட்டுமே இந்துமதத்தின் வாழ்வாக ஊருக்கு வழங்க வேண்டும்.

36) அருளாளனின் சொற்களும், செயல்களும்தான் எத்தகைய தரமுடைய மக்களையும் மாற்றும் வல்லமையுடையது.

37) அறிவுக் குறைவுடையவனும், ஆற்றலற்றவனும் கூட அருளாளனுல் கடைத்தேறி உரிய நிலைகள் பெற முடியும்.

ஆனால், நம்பிக்கையற்றவனும், சந்தேகக்காரனும் தேறவே முடியாது! முடியவே முடியாது!

38) குருபத்தி இல்லாதவனின் சொல்லும், செயலும் எந்த மனிதரின் நெஞ்சையும் தொடாது, சிந்தையை மாற்றாது.

39) எவ்வளவு தூரம் விரைந்தும், விரிந்தும் குருவிடம் நித்திய சத்தியங்களையும், தத்துவங்களையும் பெற முடியுமோ அப்படிப் பெற்றுச் செயல்படுபவனே அருளாளனாக முடியும்.

40) குருவிடம் அணுக்கத் தொண்டு செய்து பெறும் அருளும் அருளுரையுமே துன்ப மலையைத் தகர்க்கும், எதிர்ப்புக் கடலைக் கடக்கும்.

41) பதினெண்சித்தர்களின் வாசகங்களையும், வாக்குகளையும் அப்படியே வழங்குவதே தளர்வையும், அயர்வையும், மலைப்பையும், பேதலிப்பையும், இயலாமையையும் அகற்றும்.

42) குருவிடம் தன்னை முழுமையாக ஒப்படைக்கத் தயங்குபவனைத் தருவோ, திருவோ ஏற்று கருவினை வெல்ல உதவுவது எப்போது முடியும்? எப்படி முடியும்?

43) தானும் குருவும் ஒன்று என்று ஏற்ற பின்னர் உலகில் உரிமையோ, பெருமையோ, உணர்வோ தனக்குள் இருக்க வாழ்பவன் நிலை பாதிக் கிணறு தாண்டுபவன் நிலையே!

44) குருவும் திருவும் ஒன்றெனப் புரிந்தவர்க்கு உலகியல் மாயையோ, கற்பனையோ, நடைமுறையோ ஒரு பொருட்டாகாது.

45) தெரியாதன தெரியவும், புரியாதன புரியவுமே குருவை நெருங்குகின்றோம் என்று உணர்ந்தவர் குருவிடம் சரணாகதி அடைந்து நொடிக் கணக்கில் விடிவைப் பெறுவர்.

46) திருவே கருவாகித் தருவாகிக் குருவாகிடலால்; குருவோடு இரண்டறக் கலந்திடலே இறைமை எய்தலாகும்.

47) அருளுலகில் குருவின்றிச் செயல்படுபவன் கைக்கோலை நழுவ விட்டுவிட்டு நடக்கும் பிறவிக் குருடனாவான்.

48) குருவழிச் சித்தி பெற்றவரே பிறரை இந்துமத வழி நடத்தி வாழ்க்கைப் பயனை பெறச் செய்வர்.

49) ஒன்பது வகை வாசகங்களில் ஒன்றையாவது உரைத்தால் போதும்; எவரையும் இந்துமதத்தை ஏற்று இறைமையடையச் செய்யலாம்.

50) பதினெண்சித்தர்களின் வாசகங்களைச் சிந்தையிலும், நெஞ்சிலும் பதித்துக் கொள்ளாத அருட்பணியாளன் முயற்சி; குருடனுக்குக் குருடன் இருட்டறையில் வழிகாட்டுவது போலவாகும்.

51) பாலைவனத்து மழையும், பதினெண்சித்தர் வாசகமில்லா அருட்பணியும் நிறைவான பயன் தர முடியாதவையே.

52) மணமில்லாத மலரும், பதினெண்சித்தர் வாசகமில்லாத அருட்பணியும் ஒன்றே.

53) ஒன்பது வகை வாசகங்களையும் ஏட்டில் பயிர் செய்பவரே தருக்கள்.

54) பதினெண்சித்தர்களின் வாசகங்களைப் பக்குவமாக அறிவித்துப் பங்காளிகளை உருவாக்கிடு! பகையாளிகளை உருவாக்கிடாதே!

55) அருட்பணியாளன் அருளுலகில் அனைவரையும் இணைக்கும் பாலமாக இருக்க வேண்டுமே தவிரத் தடுப்புச் சுவராகவோ, அரணாகவோ ஆகிடக் கூடாது.

56) தருக்களால்தான் அருளுலகில் வஞ்சம், பகை, போட்டி, பொறாமை, போர், ... உருவாகாமல் தடுக்கப்படுகின்றன.

57) தருவாசகங்கள் தனிமனித வாழ்வில் மதத்தால் கலக்கம், கவலை, குழப்பம், தவறான கருத்து, தேவையற்ற உணர்வு,

முறையற்ற போக்குகள் அனைத்தையும் அகற்றுகின்றன! அகற்றுகின்றன! அகற்றுகின்றன!

58) அருட்பணியாளன் தன்னிடம் வருபவர்களின் நோக்கையும், போக்கையும் வினாக்களால் ஆராய்ந்தே கணிப்புச் செய்து தேவையான அளவுக்கு அருளுதவி புரிய வேண்டும்.

59) யாரும் பாவியல்ல என்ற பேருண்மையினை விளக்குவதே தருக்களின் வாழ்வும் வாக்கும் வாசகமும்.

60) பரிதாபத்துக்குரிய வாழ்க்கை நடத்துபவர்கள் பாவிகளல்ல. ஏமாற்றப்பட்ட அப்பாவிகளே!

61) தருக்கள் காடுகளில் வாழுவதால் சமயத்தத்துவ வளமும், செழிப்பும் கொழுமை மாறுமல் காக்க முடிகின்றது.

62) தருக்களால்தான் தமிழே அனைத்துக்கும் உயிர் தரும் அமிழ்து என்ற உண்மை எளிமையாக விளக்கப்படுகிறது.

63) தருக்களே இம்மண்ணுலகப் பயிரின உயிரின வாழ்வின் கரு; தமிழால்தான் உயிர்ப்பும், உய்வும் பெறுகிறது என்ற தத்துவத்தை விளக்குகிறுர்கள்.

64) தருக்களே அருளுலக வாரிசுகளின் குருகுலம்! உலைக்களம்! கருவூலம்! பாசறை!

65) தருவாசகங்களே அருளுலக இருளகற்றும் பணியாளரின் கைச்சுடர்கள்.

66) அருளுலகத் தவறுகளையும், கேடுகளையும், கொடுமைகளையும், கடுமைகளையும் தகர்க்கும் ஆயுதங்களே தருவாசகங்கள்.

67) அருளுலகத் திருத்தங்களுக்கு உருவமும், உயிரும், செயலும் வழங்குவனவே தருவாசகங்கள்.

68) தமிழ் அமுதால்தான் அருளுலகில் பேரின்பப் பெருவாழ்வு எளிதில் பெறலாம் என்பதைத் தருவாசகங்கள் விளக்குகின்றன.

69) சித்தர்நெறிப் பீடாதிபதிகளே ஓலைகளில் எழுதப் பட்டவைகளையும், பட்டயங்களில் பொறிக்கப் பட்டவைகளையும், செவிகளில் ஓதப் பட்டவைகளையும் விருந்தாக வழங்குவர்.

70) சித்தர்நெறிப் பீடாதிபதிகளே வாக்குகளையும், வாசகங்களையும் அருளுலகக் குருடர்களுக்குக் கண்களாக வழங்கிடுவர்.

71) சித்தர்நெறிப் பீடாதிபதிகளே பட்டமரமாய் இருப்போரையும் இட்டுத் தொட்டுச் சுட்டித் துளிர்த்துத் தளிர்த்திடச் செய்வர்.

72) அருட்பணியாளர்களே! அனைத்துப் பிணிகளையும் அகற்றச் சித்தர்நெறி மருந்தை விருந்தாக வழங்குங்கள்.

73) சித்தர்நெறிப் பீடாதிபதிகளின் காலங்களில் அண்டபேரண்ட அருளாட்சிப் பணியில் விழிப்போடு பங்கு பெற்றுச் செழிப்படையுங்கள்.

74) சித்தர்நெறிப் பீடாதிபதிகளின் நெறியைச் செயலாக்கிப் பயன் பெறுங்கள். அனுவசிய விருப்பு வெறுப்பு வெறிகளால் தானும் கெட்டுப் பிறரையும் கெடுக்காதீர்.

75) சித்தர்நெறிப் பீடாதிபதிகளின் வாக்கும் வாசகமும் வேத வாசகமாகவும், தேவ வாக்காகவும் ஏற்கப் படுபவராலேயே உயிர்ப்புப் பெற முடியும்.

76) பதினெண்சித்தர்கள் இம்மண்ணுலகுக்கு வந்தநிலை, செயல்பட்டநிலை, உருவாக்கியவைகளின் நிலை, ... முதலியவற்றை முறையாக அறிவித்தலே அருட்பணி இறைமையை விளக்கும் அறிவுப் பணி.

77) எளிய சித்தர்நெறி வாசகங்களைக் குழப்பாமல் மலைவாழைக் கனி போல் அனைவருக்கும் வழங்குக. அதுவே அனைத்தையும் நலப்படுத்தி வளப்படுத்தும்.

78) யாருடைய நேரத்தையும் வீணாக்காமல் சுருக்கமாகப் பேசி, சித்தநெறி வழி வாழ்ந்து அருட்பயன் துய்க்க வழிகாட்டுவதே அருட்பணியாளன் கடமை.

79) உரிய பக்குவம் உடையவர்களன்றிப் பிறர்க்கு அரிய பெரிய அருளாற்றல்களை மெய்யாக்கிக் காட்டாதவனே அருளாளன்.

80) அருளாளன் ஒருபோதும் தன்னை மாயவித்தைக் காரனாக அறிமுகப்படுத்திக் கொள்ளமாட்டான்.

81) அருளாளன் எப்போதும் தருக்களின் வாழ்வியலையே தத்துவமாகவும், சான்றாகவும், ஊன்றாகவும் வழங்கியே அருள்நெறி வளர்ப்பான்.

82) உலகெங்குமுள்ள மனிதர்களிடம் சித்தர்நெறி வித்துக்களை விதைத்திடு! அறுவடைக்கு ஆசைப்படாதே!

83) நம்புகின்றவரா, நம்பாதவரா என்று ஆராயாமல் சித்தர்நெறி நடைமுறை வழங்கிடலே அருளாட்சியை அமைத்துத் தரும்.

84) யாராக இருந்தாலும் அருளாட்சிப் பணியில் பங்கு பெறுமாறு அறிவிப்பும் அழைப்பும் வழங்குங்கள். வற்புறுத்த வேண்டாம். அதுவே அருளாட்சி அமைப்புப் பணி.

85) கோழைகளும், மோழைகளும் முடிவெடுக்க முடியாமல் அருளாட்சி அமைப்புப் பணிக்கு அஞ்சிக் காரண காரியமற்ற வெறுப்பும், மறுப்பும், எதிர்ப்பும் வழங்குவதைக் கருத்தில் கொண்டே செயல்பட வேண்டும்.

- இங்கு எழுதப்பட்டுள்ள எண்பத்தைந்து தருவாசகங்களும், மொத்தம் உள்ள நூற்றெட்டுத் தருவாசகங்களுள் இந்துமதத் தந்தை, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் நினைவிலிருந்து எழுதப்பட்டவை. மற்றவை தற்போது ‘குருதேவர்’ அவர்களின் நினைவுக்கு வரவில்லை. **இவை யாவும் தமிழுக்கு உரிமையானவை; தமிழருக்கு உரிமையானவை; தமிழ் மூலம், தமிழர் மூலம் இம்மண்ணுலக மாந்தர்கள் அனைவரின் அறியாமைகளை அடியோடு அழிக்க வந்த ‘அருட்கொடைகள்’.**

எத்தனையோ வேலைகளுக்கு நடுவில், ஓய்வற்ற அலைச்சலின் இடையிடையே, இரவுபகல் என்று பாராமல், களைப்பையோ தூக்கத்தையோ … சற்றும் பொருட்படுத்தாமல் ‘ஞாலகுரு’ அவர்கள் எண்ணற்று எழுதிக் குவித்துள்ள கருவூலங்களில் இதுவும் ஒன்றே. இது போன்று எத்தனையோ இன்னும் எழுதப்பட்டால்தான் எண்ணற்ற காலமாக மறைந்து கிடக்கும் பதினெண்சித்தர்களின் பைந்தமிழிலுள்ள எண்ணற்ற அருட்கொடைகளின், அறிவுக்கொடைகளின் … தன்மைகளை, உண்மைகளை, மேன்மைகளை … அனைவரும் தெரிந்து கொள்ள முடியும்.

ஆயினும் இது போன்று எத்தனையோ குருதேவர் அவர்கள் எழுதி வைத்துள்ளார்கள். அவை அனைத்தும் கோப்புக்களின் நடுவிலேயே இருந்து செல்லுப் பூச்சிகளுக்கும், கறையான்களுக்கும் உணவாகி அழிந்து விடாமல்; அச்சிடப்பட்டு அனைவர்க்கும் பயன்படும் பொன்னுள் விரைவிலேயே வந்திட வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

எண்ணற்றவற்றினை குருதேவர் அவர்கள் எழுதி எழுதிக் குவித்த வண்ணமே இருப்பதனுல் எழுதும் தாள்கள் போதிய அளவு வாங்கிடப் பொருள்வசதி போதவில்லை. எழுதிட எழுதுகோலில் ‘மை’ போடும் செலவு கூடக் கட்டுக்குள் இல்லை. இவையனைத்தும் விரைவில் அச்சாகிட வேண்டும் என்ற எண்ணம் ஒருபுறம்

இருந்தாலும், இன்னும் இதுபோன்ற எண்ணற்றவை ஞாலகுருவின் நினைவுகளில் இருந்து பசுமையாக முழுமையாக விரைவில் ஏட்டில் வடிக்கப்பட வேண்டும் என்றும், தமிழின் சொத்துக்களை முழுமையாக விரைவில் வெளிக் கொணர வேண்டும் என்றும் துடிக்கும் துடிப்பினை என்னவென்று சொல்வது?

என் போன்ற பலரின் வாழ்வே, வாழ்வின் பயனே, வாழ்வின் பொருளே **'தமிழுக்காகத்தான்'** என்றிருந்தாலும், இன்னும் எண்ணற்றோரின் முழுமையான ஆர்வமும், ஒத்துழைப்பும், செயல்பாடும், பொருளுதவியும் ... கிடைத்தால்தான் ஓரளவாவது விரைவில் கடலினும் பெரிய அளவிலுள்ள தமிழிலுள்ள கருத்துக் கருவூலங்களை, வரலாற்றுப் பேருண்மைகளை, மெய்ஞ்ஞான நோக்குகளை, விஞ்ஞானப் போக்குகளை, கலைகளை, அறிவியல்களை, ... குருதேவரின் நினைவுகளிலிருந்து ஏட்டில் எழுதி அதன்பின் விரைவில் ஏட்டில் இருப்பதனை நாட்டில் நிலைநாட்டிட முடியும். அனைவரும் முன்வாரீர்! வாரீர்! வாரீர்!

வெற்றி நமதே! யாவும் குருவருளே! திருவருளே!

அன்பு

**அருட்சேனைத் தளபதி,**

**அருட்சேனை இணைத் தளபதி.**

**//உண்மை நகல்//**

**//இக்கட்டுரையின் மூலம்: சித்தரடியான் திரு இரா. சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்த நகல்.//**

# கருத்துப் பரிமாற்றச் செயல்நிலை விளக்கப் பரிந்துரைத் திருமடல்

அண்ட பேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், இந்துமத ஆச்சாறிய பீடம், தமிழின ஆச்சாரியார், அருளாட்சி நாயகம், நிறையக்ஞர், கருவறை மூலவர்களின் அம்மையப்பர், குவலய குருபீடம், இந்துமதத் தந்தை, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் விடுக்கும் "செயல்நிலை விளக்கத் திருவோலை".

அருள்மிகு பிறம்மயோகி, விருதுநகர் மாரியம்மன் சன்னிதானம், சித்தரடியார் திரு M.S.R.மாரியப்பன் அவர்களின் இயக்கநிலை ஐயங்களுக்கு வழங்கும் அருளார்ந்த அறிவுரை.

1. தங்களின் உள்நாட்டு அஞ்சல் 11-8-87இல் வரப் பெற்றதை இன்றுதான் (13-8-87) படிக்க நேரிட்டது. அஞ்சல்களின் மிகுதி, அருட்கணிப்புகளின் அவசரம், சுற்றுப் பயணங்களின் களைப்பு, கல்லூரிப் பணி, புதிய கட்டுரைகள் தயாரிப்பு முயற்சி, ஆங்காங்கே நம்மவர்கள் தேர்ச்சிகளுக்கும், தேவைகளுக்கும் ஏற்ப அருளுலக உரிமையும், பெருமையும் வழங்க ஏதுவாகிடப் புதிய அருட்பட்டங்கள் வழங்கும் ஆய்வுப்பணி - என்று அடுக்கடுக்காகப் பணிகள் அலைகடல் போல் உள்ளன என்பதால்தான் அஞ்சலைப் படிக்கவே இரண்டு நாட்களாகி விட்டன. இருந்தாலும் தங்களின் ஐய வினுக்கள், அறிவு வினுக்களாகவும், ஆர்வம்நிறை செயல்நிலைத் துடிப்பு மிக்கவைகளாகவும், இயக்க வளர்ச்சிக்கு வலிவும், பொலிவும் வழங்குபவைகளாகவும் ..... உள்ளன என்பதால்; பல்வேறு

அலுவல்களுக்கிடையில்; மின்சாரத் தண்டவாள வண்டிப் பயணத்தில் யாமே எமது கைப்பட இப்பதில் வரைகின்றோம். தாங்கள் மிகப் பெரிய முதன்மை பெறும் சித்தரடியார் என்பதனை அருளுலகமும், பொருளுலகமும் ஒருசேர ஒப்புக் கொள்கின்றன. எனவே, அன்புகூர்ந்து; இந்தக் '<u>கருத்துப் பரிமாற்றச் செயல்நிலை விளக்கப் பரிந்துரைத் திருமடல்</u>' நம்மவராலும், பிறராலும் இலக்கியமாகப் பயிலப்படட்டும். இதன் நகல் அனைவருக்கும் அனுப்பப் படட்டும்.

2. இனிய நண்ப! நமது தமிழகத்தைத் தாத்தாக்களும், ஆத்தாக்களும், அம்மையப்பன்களும், பழையகால மரபுப்படி பாண்டி மண்டலம், சோழ மண்டலம், சேர மண்டலம், பல்லவ நாடு, தொண்டை நாடு, வேங்கை நாடு, எருமை நாடு ..... சொற்களாலேயே குறிக்கிறார்கள். அண்மையில் குறிப்பிட்ட சிலருக்கு "<u>மாதண்ட நாயகங்களுள் ஒருவர்</u>" என்ற <u>அருளாட்சி பட்டம் வழங்கியுள்ளார்கள் அருளுலகத்தார்கள்</u>.

அவற்றைத் தேவைக்கேற்பவே அவ்வப்போது அறிவிக்கின்றோம் யாம். 1. M.S.R.மாரியப்பன், 2. பெரி.முத்தையா, 3. வெ.செகதீசன், 4. A.இராமர், 5. M.C.இராமன், 6. N.S.சாமிநாதன் எனும் ஆறு பேர்களுக்கு மட்டும், 'பாண்டி மண்டல மாதண்ட நாயகங்களுள் ஒருவர்' என்ற பட்டம் உடனே அறிவிக்குமாறு <u>குருவாணை</u> வழங்கப் பட்டிருந்தாலும், அவை, குறிப்பிட்ட காலம் கழித்துத் <u>**திருவாணை**</u> கிடைக்கும்போதுதான் அறிவிக்கப்பட்டுச் செயலுக்கு வரும்.

3. பேரார்வமுடைய பெருந்தகையீர்! இன்று 13-8-87இல் மதுரையில் பெரியவர் அருள்மிகு பாப்பார முத்தையா சன்னிதானம் டாக்டர் S.R. நீலமேகம் பிள்ளையின் 243வது யாகபூசை நிறைவுத் திருவிழா அருளுலகப் பாராட்டுகளுடன் நிகழ்கின்றது. அதில் கலந்து கொள்ள;

யாம், எமது பதிலியாக அருள்மிகு மாங்காடு காமாட்சியம்மன் சன்னிதானம் சித்தரடியார் பா.மோகனைச் சென்னையிலிருந்து அனுப்பியுள்ளோம். அவருக்குத் தேவையான அளவு அருளுலக உரிமைகளும், சத்திகளும் வழங்கியுள்ளோம். நமது கருத்து விளக்கங்கள் பலவற்றையும் பெருவாரியாக அவரிடம் கூறியனுப்பியுள்ளோம். எனவே, அவற்றைத் தெரிந்தும், தெரிய வைத்தும்; புரிந்தும், புரிய வைத்தும் அவரின் சுற்றுப் பயணத்தை வெற்றியாக்கிடுங்கள்.

4. ஆர்வமிக்க நண்ப! நமது வளர்ச்சியில் வளமும், விரைவும், விரிவும் தேவையென்ற உயரிய உணர்வால்; தாங்கள் தங்களுடைய கருத்தை மிக நாகரீகமாக வெளிப்படுத்தியிருந்தீர்கள்; "...... ஐயா! மக்கள் நம்மைச் சுடுகாட்டுப் பூசைக்காரரர்கள், மந்திரவாதிகள், பூசாறிகள் என்ற கண்ணோட்டத்தில்தான் பார்க்கிறார்கள் என்பதால்; நமது செயல் நிலைகளில் மாற்றங்களையும், புதிய திட்டங்களையும் அறிவித்தால் நல்லது, புதியவர்கள் விரைந்து நமது இயக்கத்தில் சேர்ந்தால்தான், நமது வளர்ச்சியில் விரிந்து பரந்துபட்ட உயரியநிலை உருவாகும்...." என்ற இந்தக் கருத்தோட்ட வாசகம் சிறப்பாக உள்ளது.

நண்ப! நம்மைப் பூசாறிகள்! சாமியார்கள்! மந்திரவாதிகள்! குறிகாரரர்கள்!..... என்று குறை கூறுபவர்களையும், கேலி செய்பவர்களையும், அச்சநிலை அறிமுகம் செய்பவர்களையும் பற்றிச் சற்று ஆழமாகச் சிந்தியுங்கள்.

இவர்களின் வீடுகளில் கடவுள்களின் படங்களில்லையா? பூசைக்கென இடமில்லையா? இவர்கள் குறிகாரரர்களையும், மந்திரவாதிகளையும், சாமியார்களையும் நாடவில்லையா? இவர்களிடம் பத்தியில்லையா? அல்லது இவர்கள்தான் பூசையே செய்வதில்லையா?..... எனவே,

நாம் இப்படிப்பட்ட ‘உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்’ பற்றிக் கவலைப்படாமல்தான் செயல்பட்டாக வேண்டும்.

அதாவது, போலியான வாழ்க்கை வாழும் கூலிக்கார நெஞ்சமும், போலிச் சிந்தையும் உடைய இளைஞர்களைப் பற்றி மட்டும் கவலைப்பட்டால் போதும். அதன்மூலம் நமக்குத் தேவையானவர்கள் தயாராகி விடுவார்கள். அவர்களைக் கொண்டு அனைத்து வகையான செயல்திட்டங்களையும் நிறைவேற்றிடலாம்.

இதனை விளக்கமாகக் கூற வேண்டுமேயானால்; நாட்டிலுள்ள இளைஞர்களில் பேராற்றலும், வீர உணர்வும் உடையவர்களைத் தேர்ந்தெடுத்துத்தான் சேனைகள் தயாரிக்கப் படுகின்றன. அதேபோல, நமது தமிழ்மொழி, இனம், நாடு, பண்பாடு, சமயம், சமுதாயம்.... என்ற பற்றும், பாசமும், பிடிப்பும் உடையவர்களை மட்டும் தேர்ந்தெடுத்து நம்மவர்களாக்கி அருட்சேனை தயாரித்திட்டால் போதும்; அந்த அருட்சேனையே அருளாட்சி அமைப்பதிலும், நிகழ்த்துவதிலும் முழு சத்தியாகப் பயன்பட்டிடும். எனவே, நம்மால் முடிந்தவரை நாட்டு நடப்பில் தமிழுணர்வும், சமயப்பற்றும், இனப்பற்றும், நாட்டுப்பற்றும் உடையவர்களை இளைஞர் சமுதாயத்தில் உருவாக்கும் பணியினைச் சிறப்பாக செய்ய வேண்டியவர்களே நாம்.

இதனை நம்மவர்கள் முழுமையாக உணர்ந்திட்டால்; இளைஞரல்லாத நடுத்தர வயதினரும், முதியவரும் பற்றிக் கவலைப்படாமல்; இளைஞர்களைப் பற்றி மட்டுமே கவலைப்பட்டுச் செயல்படக் கூடிய தரத்தையும், திறத்தையும், தீரத்தையும் வளர்த்துக் கொண்டிடுவோம் நாம்.

இந்தக் கருத்தோட்டத்தை நம்மவர்களுக்கு விளக்கியுரைக்கும் மாபெரும் பணியில் தங்களைப் போன்றவர்களால்தான் சிறப்பாகச் செயல்பட முடியும். எனவேதான், தங்களுக்கு இந்நெடிய அஞ்சல் எழுதப்படுகிறது.

5. அறிவாற்றல் மிக்க நண்ப! தமிழரின் சமுதாயச் சீர்திருத்தத்தின் பெயரால் சிந்தனைச் சிற்பி, பகுத்தறிவுப் பகலவன், சிறைக்கஞ்சாச் சிங்கம் தந்தை பெரியார் ஈ.வே.ரா. அவர்கள் திராவிடர் கழகமென்ற அஞ்சாநெஞ்சத் தீரப் படையை உருவாக்கி வீர வாழ்வு வாழ்ந்து சென்றிட்டார். கணிசமான அளவு தமிழர்கள் அவருடைய தலைமையை ஏற்றார்கள். கொள்கையை நம்பினார்கள்; குறிக்கோளை அடையப் போராடினார்கள். ஆனால், அவரால் நிலைத்து நின்று நீடித்துப் பயனளிக்கக் கூடிய சாதனைகள் சந்திக்கப் படவில்லை. அது மட்டுமின்றி, 'அவருடைய போதனைகளால் தமிழினத்துக்கு விடிவு ஏற்பட இயலாது' என்ற நிலையினை அவருடைய கழகம் செய்யத் தொடங்கி விட்டது.

அதாவது, அவருக்குப் பின்னால் அவரது கழகத்தவர்கள் சமுதாயச் சீர்திருத்தத்தின் பெயரால் தொன்றுதொட்டு பாரம்பரியமாக இருந்து வரக்கூடிய எல்லாவிதமான பழக்க வழக்கங்களையும், நம்பிக்கைகளையும், கொள்கைகளையும், குறிக்கோள்களையும்; இழித்தும், பழித்தும் நலிவடையச் செய்து வருகிறார்கள். இதனால், தமிழினத்தின் பண்பாடும்; நாகரீகமும் தங்களுடைய கட்டுக்கோப்பை இழப்பதுடன்; தமிழ் மொழியின் பெருமையும், உரிமையும், தமிழின ஒற்றுமைக்குரிய ஆட்சிநிலையும் பெரும் பாதிப்புக்குள்ளாகி விட்டன.

இப்படி தந்தை பெரியார் உருவாக்கிய கழகம் சமுதாயச் சீர்கேட்டிற்கும், சிதைவுக்கும், முடக்கத்துக்கும், அடக்கத்துக்கும் பாடுபடக் கூடிய ஒன்றாகி விட்டது. இதனால், தந்தை பெரியாரின் கனவு கனவாகவே இருக்க நேரிட்டு விட்டது. அவர் தமிழினத்திற்கு ஆற்றிய அத்தனைத் தொண்டுகளும் மக்களால் விரைந்து மறக்கப் படவும், துறக்கப் படவும், மறுக்கப் படவும், வெறுக்கப் படவும் கூடிய நிலையை அடைந்திட்டது. எனவே, **இனிமேல் தந்தை பெரியாரின் பெயரையோ, அவருடைய போதனைகளின் புகழையோ,**

**<u>சாதனைகளின் பட்டியலையோ எடுத்து விளக்கிக் கூறி தமிழ் மக்களுக்கு எத்தகைய தொண்டினையும் ஆற்றிட முடியாது! முடியாது! முடியாது! முடியவே முடியாது!</u>**

இறுதியாக ஒன்றைக் குறிப்பிட வேண்டுமென்றால்; திராவிடக் கழகத்தில் குறிப்பிட்ட கணிசமான தொகையினர் புகழையும், பொருளையும், உழைப்பையும் பயன்படுத்திக் கொண்டு சுகவாழ்வு வாழுகிறார்கள் என்பதுடன்; அவர்கள் பேராசையின் காரணமாக மாற்று மதத்தவரிடமும், அன்னிய இனத்தவரிடமும் கைக்கூலி அல்லது வெகுமதி பெற்றுக் கொண்டு அவர்களையெல்லாம் புகழுகின்ற நேரத்திலே நமது இனத்தையும், பண்பாட்டையும், நாகரீகத்தையும் கட்டிக் காக்கும் மதத்திற்கு துரோகச் செயல்களையும், விரோதச் செயல்களையும் செய்து வருகிறார்கள். அதாவது, இன்றுள்ள திராவிடக் கழகத்தார்கள் தமிழினத்தை ஒற்றுமையோடும், பற்றோடும், பாசத்தோடும், கூட்டுறவோடு கட்டுப்பாடாகவும் வாழச் செய்கின்ற <u>தமிழ் மதமான இந்துமதத்தைக்</u> கண்மூடித்தனமாகத் தாக்குகிறார்கள்.

இதேபோல், தமிழர்களுக்கு விழிச்சியும், எழுச்சியும் வழங்கித் தன்மானத்தோடும், தன்னம்பிக்கையோடும் வாழச் செய்யும் <u>தமிழ் மொழியையும், அதன் இலக்கியங்களையும் மிகவும் அநாகரீகமாக இழித்தும், பழித்தும் அழிவு வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். எனவே, பெரும்பாலான தமிழர்கள் சமுதாயச் சீர்திருத்தத்தின் பெயராலோ அல்லது பகுத்தறிவின் பெயராலோ செயல்படும் தனி மனிதர்களையும், பொது நிறுவனங்களையும், கழகங்களையும் விரும்பவோ, நம்பவோ, ஏற்கவோ தயாராக இல்லை! தயாராக இல்லை! தயாராக இல்லை! தயாராகவே இல்லை!</u>

எனவேதான், நாம், நமது இயக்கத்தை மிகத் தெளிவாக ஒரு மதவாத இயக்கமாக அதாவது, சமய மறுமலர்ச்சி இயக்கமாகத்தான்

வளர்க்க வேண்டுமே தவிர வேறு எவ்விதமாகவும் வளர்க்கக் கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது! அதாவது, நாம் செய்ய விரும்புகின்ற அனைத்து வகையான பண்பாட்டுப் புரட்சிகளையும் முழுக்க முழுக்க மதச் சிந்தனைகளின் மூலமும், மதச் செயல்களின் மூலமும்தான் நிகழ்த்திடல் வேண்டும் என்ற தெளிவான கொள்கையைப் பெற்றிருக்கிறோம். (Our policy is very clear that all of our approaches and activities should be carried out only through religious principles and rituals.)

எனவே, தாங்கள் நமது இயக்கம் பொதுமக்களால் பூசாறிகளின் இயக்கமாகவோ, மந்திரவாதிகளின் இயக்கமாகவோ, குறிகாரர்களின் இயக்கமாகவோ, மதப் புராண இதிகாசவாதிகளின் இயக்கமாகவோ.... கருதப்படுவது பற்றி எள்முனையளவு கூட வருத்தமின்றிச் செயல்படுங்கள்! செயல்படுங்கள்! செயல்படுங்கள்! வெற்றி நமதே! நாளை நமதே! நாம் **எதையும் செய்ய வல்ல அருளுலகத்தவரின்** சீரிய தலைமையின் கீழ்தான் செயல்படுகிறோம், செயல்படுகிறோம், செயல்படுகிறோம். நமது வழிகாட்டிகளாகவும், வழித்துணைகளாகவும் வருகின்ற தாத்தாக்களும், ஆத்தாக்களும், அம்மையப்பன்களும் **அளப்பரிய ஆற்றலினைப் பெற்றவர்கள்**. எனவே, உறுதியாக நாம் வெற்றி பெறுவோம், கவலை வேண்டாம்.

6. இயக்க வளர்ச்சியில் அயராது உழைக்கும் இனிய நண்ப! பேரறிஞர் அண்ணாவின் பைந்தமிழ் அடிப்படையில் தமிழர்களுக்கிடையே விழிச்சியுணர்வு பிறந்தது; அந்த விழிச்சியுணர்வு தமிழர்களை எழுச்சிமிக்க கிளர்ச்சிகளில் ஈடுபடச் செய்து, அக்கிளர்ச்சிகளின் வளர்ச்சிகளால் தமிழர்க்கு அரசியல் உணர்ச்சிகளில் மொழிப் பற்றின் அடிப்படையிலும், மொழியுணர்வு அடிப்படையிலும், மொழிக்கு ஆட்சி மீட்சி பெற்றுத் தரும் முயற்சியிலும் தமிழ்நாட்டு

இளைஞர் சமுதாயத்தைப் பெரிய அளவில் பேராற்றலுடன் ஈடுபடச் செய்தது.

அதாவது, அண்ணாவின் பெயரால் பிறந்த கொள்கையும், குறிக்கோளும், கழகமும், பல்வேறு நிறுவனங்களும் தமிழ்மொழிக்கு வளவளர்ச்சியை உருவாக்குவதிலும், தமிழ் ஆட்சி உரிமையும் பெருமையும் பெற்றுத் தருவதிலும், தமிழ் மொழியின் அடிப்படையில் தமிழர்கள் ஒன்று திரட்டி ஒற்றுமையுணர்வும், ஒருமைப்பாட்டுணர்வும், கட்டுப்பாடும் உடைய ஓர் ஒப்புயர்வற்ற இனமாக்கும் பணியிலும்; தமிழ் மொழியின் இலக்கியச் செல்வங்களை படிப்பறிவு மிக்க பெரும் புலவர்கள் முதல் படிப்பறிவே இல்லாத பாமரர்கள் வரை பலரும் பெற்றுத் துய்த்து மகிழுமாறு செய்வதிலும்; தமிழ்மொழி கற்றவர்களுக்கு அனைத்துப் பணிகளிலும் முதலிடம் கிடைக்குமாறு செய்வதிலும் வாழ்ந்தன.

ஆனால், அதனால் அண்ணாவின் புகழும், அவருடைய கழகமும், கழகத் தோழர்களும், பல்வேறு வகையான கலைத் துறையினர்களும்..... மிகமிகக் குறுகிய கால அளவில் மிகமிகப் பெரிய அரிய சீரிய வளர்ச்சியினைப் பெற்றார்கள். இன்னும் சொல்லப் போனால், பேரறிஞர் அண்ணா ஆச்சரியப்படும் அளவிற்கு அவர் தோற்றுவித்த கழகம் தமிழக ஆட்சியையே பிடித்து விட்டது.

ஆனால், பேரறிஞர் அண்ணா அவர்கள் அவருக்குக் குறுகிய காலத்தில் கிடைத்த அந்த எதிர்பாராத மாபெரும் அரசியல் வெற்றியினைக் கண்டு அச்சப் பட்டார், கூச்சப் பட்டார். அப்படி அவர் நெஞ்சம் பதைபதைத்து, சிந்தை கலங்கியது போலவே அவரது கழகத்திற்குக் கிடைத்த அரசியல் வெற்றியால்; அவர் **உயிரெனப் போற்றிப் பேணிப் பாதுகாத்திட்ட** <u>‘தனித் தமிழ் இயக்க நோக்கு’, ‘மொழித் தூய்மைக் கொள்கை’, ‘தமிழ்மொழியின்</u>

செழிச்சியே தமிழர்களின் செழிச்சி என்ற கொள்கை', 'தமிழ் மொழியின் ஆட்சியுரிமை மீட்சி பெறுவதே தமிழினத்திற்கு மாட்சிமை தரும் என்ற சித்தாந்தம்', 'அனைத்துத் துறைகளிலும் தமிழ்மொழியையே செயல்மொழியாக்குவதே தமிழர்க்குத் தன்னம்பிக்கையை உருவாக்கும் என்ற கருத்து', 'தமிழ் கற்றவர்களுக்கே அனைத்து அலுவலகங்களிலும் முதலிடம் தரும் திட்டம்தான் தமிழர்களுக்கு தன்மான உணர்ச்சியை மலர்ச்சி பெறச் செய்திடும் என்ற செயல்திட்டம்', 'கோயில்களில் தமிழர்களே குருக்களாக இருக்க வேண்டும் என்றும், கோயில்களில் தமிழ்மொழியே பூசைமொழியாகப் பயன்பட வேண்டும் என்றும், பத்தர்கள் அனைவரும் நேராகக் கருவறைக்கே சென்று தாங்களே பூசை செய்யும் உரிமையைப் பெற வேண்டும் என்றும்,,,,, மதத்தின் பெயரால் மடமையோ, சுரண்டலோ, குறிப்பிட்ட இன ஆதிக்கமோ, ஏதேச்சாதிகாரமோ வளர்ந்திட அனுமதிக்கக் கூடாது என்றும் ..., வழங்கிய மதச் சீர்திருத்தமும்' .... தொடர்ந்து தமிழர்களுக்குப் பயன்பட முடியாமல் போய்விட்டன.

அதற்குக் காரணம் அவருடைய புதுமையான, புரட்சியான திட்டங்கள் தமிழர்கள் மிக விரைவில் பற்றும், பாசமும், ஒற்றுமையும், ஒருமைப்பாடும், தன்னம்பிக்கையும், தன்மான உணர்வும், மொழி உணர்வும், இன உணர்வும் உடையவர்களாக உருவாக்கக் கூடிய ஆற்றலுடையவை என்பதைத் தமிழின எதிரிகளும், பகைவர்களும், விரோதிகளும் நன்கு புரிந்து கொண்டு அவரது சாதனைகளையும், போதனைகளையும், அவரது தொண்டர்களையும் பணம், பதவி, புகழ் முதலிய பேராயுதங்களால் அழித்தொழித்து விட்டார்கள்.

அதாவது, மிகச் செழிப்பாகத் தமிழ்மொழியுணர்வு வளர்ந்து, பூத்துக் குலுங்கிக் காய்த்துக் கனிந்து வழங்கிய கொழுத்த அறுவடையினால் தமிழர்களுக்கு உலகச் சமுதாய வரலாறுகளையும் படித்தறியும் பேரார்வமும், பெருமுயற்சியும் உருவாகிட்டது. அதனால்,

**‘ஏழெட்டுக் கோடிக்கு மேல் வாழும் ஒரு பழம்பெரும் உலகப் புகழ் மிக்க தொன்மையான தமிழினம் தனிநாடற்ற நாடோடியாகவும்; அந்த இனத்தின் தாய்மொழி ஒரு காலத்தில் இமயம் முதல் குமரி வரை ஆண்டிருந்த பழம்பெருமை பெற்றிருந்தும் ஆட்சியுரிமையோ, கல்வி கற்கும் இளைஞர்களுக்குப் பயிற்று மொழியாக இருக்கும் பெருமையையோ பெற முடியாத அடிமையாகி விட்டதையும்’** பற்றிச் சிந்திக்க ஆரம்பித்து விட்டார்கள்.

அந்த சிந்தனை வளவளர்ச்சி பெற்றிட்டால்; அந்த வளவளர்ச்சியால் தமிழர்களுக்கு ஏற்படக் கூடிய வலிமையான தன்னம்பிக்கை உணர்வும், தன்மான உணர்வும் வலிமைப்பட்டு நீடித்த போராட்டங்களையும், பெரிய போரினையுமே விளைவித்திடும். அப்போரின் முடிவில் தமிழ்மொழி விடுதலை, தமிழின விடுதலை, தமிழ்ப் பண்பாட்டு விடுதலை, தமிழ் நாகரீக விடுதலை .... என்பனவெல்லாம் விளைந்திடும். அதன்பிறகு, தமிழ் நாட்டிற்குள்ளோ, தமிழர்களுக்கிடையிலோ அன்னியர்களும், அன்னிய மொழிகளும் வாழ முடியாது, வாழ முடியாது, வாழ முடியாது, வாழவே முடியாது என்ற நிலைதான் உருவாகிடும்.

இவற்றை எண்ணிப் பார்த்துத்தான் பேரறிஞரின் மாபெரும் வெற்றியை *‘காய்ந்த மாடு கம்பங் காட்டிற்குள் புகுந்தது போல்’* <u>**பேராசை வெறி பிடித்தவர்கள் தங்கள் தங்களின் விருப்பம் போல் முடிந்தவரை பணம், பதவி, புகழ் என்பனவற்றைக் கொள்ளையடித்து இருந்த இடம் தெரியாமல் ஆக்கி விட்டார்கள்**</u>. அதாவது, பேரறிஞர் அண்ணாவின் சரித்திரப் புகழ் மிக்க மாபெரும் அரசியல் வெற்றி மிகமிகச் சாதாரணமான, அற்பமான, தேர்தல் விளையாட்டின் வெற்றியாகக் கருதுமாறு செய்யப்பட்டது. அதனால், <u>பேரறிஞரின் மிகப் பெரிய அறிவியல் வீர வரலாறு; நுட்பதிட்ப மிக்க அரசியல் சாதனைகள், தமிழினத்தை எல்லாத் துறைகளிலும் நிறைவான விடுதலை பெறச் செய்யக் கூடிய அறிவுரைகள், ஆய்வுரைகள், செயல்திட்டக்</u>

கருத்துரைகள் .... முதலிய அனைத்துமே காற்றில் தேய்ந்து மறைந்து விட்டன!

ஆமாம்! ஆமாம்!! ஆமாம்!!! பேரறிஞரின் வாழ்வியல்களும், வாழ்வியல் சாதனைகளும், போதனைகளும், 'தமிழின விடுதலைப் போர்ப் பரணிகளாகவும், தமிழின விடுதலைக்காகப் போரிடும் மாவீரர்களைத் தயாரிக்கும் பாடிவீடுகளாகவும், போர்க்களப் பாசறைகளாகவும்' என்றென்றும் நிலைத்திருக்கக் கூடிய தன்மை பெற்றிருந்தும், அவற்றைச் சுயநல வெறிபிடித்த பேராசைக் காரர்கள், தமிழின விரோதிகளின் சூழ்ச்சித் திட்டங்களுக்கு ஒத்துழைத்து கடலில் கரைத்த பெருங்காயமாக்கி விட்டார்கள். அதனால், இன்றைக்கு பெரும்பாலானவர்களுக்கு பேரறிஞரின் பெயரே மறந்து போகும் நிலை உருவாகி விட்டது.

இனி காலப் போக்கில் மிகமிக விரைவில் பேரறிஞரும், அவரது பெயரால் உள்ள மனிதர்களும், நிறுவனங்களும் தமிழின வரலாற்றுப் பரப்பிலிருந்தே சூழ்ச்சியாக முழுமையாகத் துடைத்தெடுக்கப் பட்டு விடுவார்கள். எனவே, இனிமேல் நம் தாய்நாட்டில் தமிழ் மொழியின் விடுதலையின் பெயராலோ, தமிழ்மொழி இலக்கியங்களின் வளவளர்ச்சியின் பெயராலோ, தமிழ்மொழிப் புலமையின் அழகாலோ, ஆழத்தாலோ எந்தவொரு தனிமனிதரும் பேரறிஞரைப் போலவோ, அவருடைய தொண்டர்களைப் போலவோ வளர முடியாது, வளர முடியாது, வளர முடியாது.

இதேபோல், தமிழ்மொழியின் பெயரைச் சொல்லிக் கொண்டு பேரறிஞர் தன்னுடைய கழகத்தைக் கட்டிக் காத்தது போல் இனிமேல் எவராலும் ஒவ்வொரு இயக்கத்தையும் கட்டிக் காத்திட முடியாது, முடியாது, முடியாது, முடியவே முடியாது. அதாவது, நமது தாயக மக்கள் தமிழ் மொழியின் பெயரைச் சொல்லுகின்ற எந்தவொரு

தலைவரையுமோ அல்லது இயக்கத்தையுமோ நம்பிடத் தயாராக இல்லை. இதை இன்னும் சற்று வெளிப்படையாகக் கூற வேண்டுமென்றால், நமது நாட்டு மக்கள் தமிழ்மொழியில் புலமை உடையவர்களையும், தமிழுக்காகப் போராடுவதாகக் கூறுகின்ற தலைவர்களையும், தமிழறிவை வளர்க்கின்ற தமிழ்ப் பேராசிரியர்களையும், சுயநல வெறிபிடித்த பேராசைக்கார அரசியல் வாதிகளை கேவலமாக நினைப்பது போலவே இவர்களையும் வெறுக்கிறார்கள். இப்பேருண்மை பலருக்கும் தெள்ளத் தெளிவாகத் தெரிந்த போதிலும் யாருமே இவற்றை விமரிசிக்கத் துணியவில்லை, துணியவில்லை, துணியவில்லை, துணியவே இல்லை....

இவற்றையெல்லாம் முறையாகவும், நிறையாகவும் எண்ணிப் பார்த்துத்தான், யாம், **எமது இயக்கத்தை தமிழ் மொழியின் பெயராலோ, தமிழ் இலக்கியத்தின் பெயராலோ மக்களிடையில் பரப்பிடும் முறையினைப் பெரும்பாலும் தவிர்த்து வருகின்றோம்**. அன்புகூர்ந்து இந்த நிலைமைகளைத் தாங்களும், தங்களைப் போன்றவர்களும் நன்கு புரிந்து பிறருக்கும் புரிய வைக்க முற்பட வேண்டும். அப்பொழுதுதான், நாம் தமிழ் மன்றங்களையும், இலக்கியக் கூட்டங்களையும், தமிழறிந்தவர்களையும் மிகுதியாக நம்பிச் சார்ந்து நமது இயக்க வளர்ச்சிப் பணிகளைச் செய்ய மாட்டோம், செய்ய மாட்டோம், செய்ய மாட்டோம், செய்யவே மாட்டோம்.

7. நாட்டு நடப்புக்குரிய உலகியல்களில் நல்ல அனுபவமிக்க எனது இனிய நண்ப மாரியப்ப! உமது உள்ளம் "நம்மவர்களால் விரைவில் நமது மக்கள் ஒன்று திரட்டப்பட்டு இந்துமத விடுதலை, தமிழ்மொழி விடுதலை, தமிழின விடுதலை, தமிழ்ப் பண்பாட்டு விடுதலை, தமிழ் நாகரீக விடுதலை .... முதலிய அனைத்து வகையான விடுதலைகளும் தேடித் தரப்படல் வேண்டும்" என்று விரும்புகிறது.

இந்த விருப்பம் நியாயமானது, நீதியானது, நேர்மையானது, வாய்மையானது, தூய்மையானது, பயனுக்குரியதும் ஆகும். தங்களுடைய உள்ளத்தின் இப்படிப்பட்ட சிறந்த பயன்மிக்க அரிய உணர்வினைப் பெரிதும் மதிக்கிறோம் யாம். ஏற்றுப் போற்றுகிறோம் யாம். எமது அரிய தவப் பயன்களால்தான் எமக்குக் கிடைத்திருக்கிறீர்கள் தாங்கள் என்று மகிழ்கிறோம் யாம்.

எனவே, எமது தவப் பயனான அருட்செல்வரே! பிறம்மயோகியே! நீவிர் விரைந்து அனைத்தையும் மறந்தும், துறந்தும், கோடைமழை போல் நமது இயக்கப் பணிகளில் ஈடுபடக் கூடிய காலம் அதிக தூரத்தில் இல்லை. ஆனால், உமக்கு இல்லறக் கடமைகள் நிறைய இருக்கின்றன. எனவே, அவற்றை விரைந்து நிறைவு செய்ய முயலுக. அதுவரை இல்லறத்தின் எல்லைக்குள்ளேயே இருந்து செயல்படுக! செயல்படுத்துக! இது அன்புக் குருவாணையாகும். இக்குருவாணை தங்களுக்குக் கசப்பை விளைவித்து விடக் கூடாது என்பதற்காகத்தான் தங்களுடைய பேரார்வமும், பெருந்திறனுமிக்க இயக்கப் பணிகளுக்குத் தடையோ, கட்டுப்பாடோ விதிக்காமல் நமது தாயகத்தின் இந்த நூற்றாண்டின் எழிச்சி வரலாற்றின் மாபெரும் வீழ்ச்சிகளை (The Falls of the Great Historical Rise of the Tamils in this century) ஓரளவு விமரிசனம் செய்திருக்கிறோம் இந்த அஞ்சலில்.

இந்த அஞ்சலைத் தாங்கள் பலமுறை திருப்பித் திருப்பிப் படிப்பதுடன், தாங்களும், தங்களின் மூலமும் பிறரும் செயல்பட்டு இந்த நெடிய அஞ்சலுக்கு எண்ணற்ற பேனா நகல்களும், கார்பன் நகல்களும் தயாரித்து தலைமைப் பீடத்திற்கும், நாடெங்குமுள்ள நமது நண்பர்களுக்கும் அனுப்பியேயாக வேண்டும், அனுப்பியேயாக வேண்டும், அனுப்பியேயாக வேண்டும். அப்பொழுதுதான் பொருளாதார வசதியற்ற நாம் தொடர்ந்து நிகழ்த்தி வரும்

**‘கையெழுத்து நகல் புரட்சி’** (The Manuscript Revolution) மிகப் பெரிய விளைச்சலைத் தந்திடும், தந்திடும், தந்திடும்.

அதாவது, நமது தாயகத்தில் சமுதாயச் சீர்திருத்தத்தின் பெயராலோ, மொழி விடுதலையின் பெயராலோ எவர் தொண்டாற்றப் புறப்பட்டாலும் மக்களுடைய ஆதரவினைப் பெற முடியாது, பெற முடியாது, பெற முடியாது, பெறவே முடியாது என்ற பேருண்மையை விளங்கிக் கொண்டவர்களால்தான் இனிமேல் நம் நாட்டில் மெய்யான, தூய்மையான, வாய்மையான, திறன்மிக்க, பயனுடைய, ஏமாற்றுதலற்ற பொதுத் தொண்டினை செய்ய முடியும், செய்ய முடியும், செய்ய முடியும். இப்பேருண்மைக்கு விளக்கமாகவும், எடுத்துக் காட்டாகவும் இருக்க வேண்டும் நாம்.

8. இடையருது பூசைகளையும், தவங்களையும் செய்து கொண்டு மக்களுக்கு அருட்பணியும், அறிவுப்பணியும் ஆற்றுகின்ற பிறம்மயோகியே! பெருமைமிக்க சித்தரடியாரே! உயர்திரு M.S.R. மாரியப்பன் அவர்களே! தாங்கள், <u>இந்தியாவில் இந்திய விடுதலைக்கு முன்பிருந்தே இந்து மதத்தின் பெயரால் சபைகளும், சங்கங்களும், மன்றங்களும், திருக்கூட்டங்களும், திருத்தொண்டர்களும், குழுக்களும், பசனைக் கூட்டங்களும், கட்சிகளும், கழகங்களும், இயக்கங்களும்.... தொடர்ந்து தோன்றித் தோன்றித்தான் செயல்பட்டு வந்திருக்கின்றன என்றாலும் கூட இந்துமதத்தின் மறுமலர்ச்சியோ, இந்துக்களிடையே வளவளர்ச்சியோ ஏற்படவில்லை, ஏற்படவில்லை, ஏற்படவில்லை, ஏற்படவே இல்லை</u> என்ற கருத்தை மிகமிக அழகாகவும், தெளிவாகவும், எளிதாகவும் எடுத்துக் கூறி நெஞ்சம் திறந்த அஞ்சலால்தான், யாம், எமது நெஞ்ச உணர்வோட்டத்தையும், சிந்தையின் கருத்தோட்டத்தையும் முழுமையாக நமது கொள்கைகளுக்கும், குறிக்கோள்களுக்கும், செயல்திட்டங்களுக்கும் விளக்கமளிக்கும் பணியில் ஈடுபடுத்தியுள்ளோம்.

எனவே, தங்களுக்கு இந்த அஞ்சலால் நமது இயக்க வரலாற்றிலும், தமிழின விடுதலை வரலாற்றிலும் நிலைத்த புகழும், பெருமையும் விளைந்திடுகின்றன, விளைந்திடுகின்றன, விளைந்திடுகின்றன. இது உண்மை, வெறும் புகழ்ச்சியல்ல. இப்படி, யாம் தெளிவுறுத்தித் தங்களுக்கு அஞ்சல் எழுதுவதின் அவசியத்தைத் தாங்கள் அவசியம் புரிந்து கொள்ள வேண்டும். தங்களுக்கு முன்னரே எம்மிடம் பல்லாயிரக் கணக்கான அடியான்கள், அடியாள்கள், அடியார்கள் தயாராகியிருந்த போதிலும் தாங்கள் பிறம்மயோகியாக உயர்ந்தது போல் மிக விரைவில் உயர்ந்தவர்கள் மிகமிகச் சிலரே.

எனவேதான், தங்களின் பெயரிலே, தங்களின் வழியாக ஒரு சில முதன்மையான கொள்கைகளை விளக்கவும், செயல்திட்டங்களை அறிவிக்கவும் விரும்புகிறோம் யாம். ஏனெனில், யாம், இவ்வுலகில் தோன்றிய மற்ற அருளாளர்களைப் போல் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட கடவுளையோ, ஆண்டவரையோ, தெய்வத்தையோ, தேவதையையோ சித்தி செய்து அருளுலகச் சத்தி வழங்க முன்வரவில்லை. யாம், இம்மண்ணுலகின் வயதான 500 கோடியாண்டுகளுக்கும் முந்திய தொன்மையினையும், பழமையினையும் பெற்றுள்ள ஒரு மாபெரும் அருட்பரம்பரையின் வாரிசாகும். எனவேதான், யாம், தேர்ந்தெடுக்கப் பட்ட அடியான்கள், அடியாள்கள், அடியார்கள் மூலமே மக்களுக்கு அறிமுகமாகித் தொண்டாற்ற விரும்புகிறோம். இதனைப் புரிந்தால் அனைத்தையும் புரிந்து கொள்ளலாம்.

நண்ப! தாங்கள் குறிப்பிட்டது போல் நமது நாட்டில் பன்னெடுங்காலமாக மதத்தின் பெயரால் எண்ணற்ற நிறுவனங்கள் இருந்து வந்த போதிலும் ஏறத்தாழ எவையுமே இந்துமதத்தை முழுமையாகப் புரிந்து செயல்பட வில்லை. மேலும், மேற்படி நிறுவனங்களில் ஏறத்தாழ எந்த நிறுவனத்திற்கும் அருளை அநுபவப்

பொருளாக வழங்கக் கூடிய அருளாளர்கள் முழுமையாகத் தலைமை தாங்கவில்லை, தலைமை தாங்கவில்லை, தலைமை தாங்கவில்லை.

இவற்றிற்கெல்லாம் மேலாக மேற்படி நிறுவனங்கள் அனைத்தும் மாற்று மதங்களோடு வேற்றுமைகளை வளர்த்துக் கொள்வதில்தான் அதிகம் கருத்தும், கவனமும் செலுத்துகின்றதே தவிர இந்துமதத்தின் மெய்யான தத்துவங்களையும், சித்தாந்தங்களையும், வரலாறுகளையும், புராண இதிகாசங்களையும் விளக்கியுரைத்து இந்துக்களை இந்துக்களாக்கும் பணியில் ஈடுபடவில்லை, ஈடுபடவில்லை, ஈடுபடவில்லை, ஈடுபடவேயில்லை.

இதேபோலத்தான், நமது இந்துமதத்துக்குரிய மடாதிபதிகளும், பீடாதிபதிகளும், பண்டார சந்நிதிகளும், ஆச்சாரியார்களும், சாமியார்களும்..... இந்துமதத்தை வளர்ப்பதற்காகக் கருத்துக்களை வழங்கவும்; அருளை அநுபவப் பொருளாக தழைத்தெழுமாறு செய்யவும்; இந்துக்களிடையில் பாசமும், பற்றும், ஒற்றுமையும், ஒருமைப்பாடும் மிக்க கட்டுப்பாடு உருவாகிடவும்; இந்துக்களிடையே இலக்கிய அறிவும், வரலாற்று அறிவும் வள வளர்ச்சி பெற்றிடவும்; பாடுபட்டிடத் தங்களின் இருப்பிடங்களை விட்டு வெளிவரத் தயாராக இல்லாதவர்களாகி விட்டார்கள், தயாராக இல்லாதவர்களாகி விட்டார்கள், தயாராக இல்லாதவர்களாகி விட்டார்கள். இன்றைக்கும் இதேநிலைதான், அனேகமாக என்றைக்கும் இதே நிலைதான் தொடர்ந்திடலாம்.

எனவேதான், யாம், நமது இயக்கத்தை முழுக்க முழுக்க அருளை அநுபவப் பொருளாக வழங்கும் வல்லமையுடைய **ஒரு சுடுகாட்டுப் பூசை இயக்கமாக** அனைத்து வகையான கருவறைகளிலும், அனைத்து வகையான பூசைகளையும் செய்யவல்ல **பூசாறிகளின் இயக்கமாக**, எந்தத் தத்துவத்தையும் விளக்கியுரைக்க வல்ல **ஞானிகள் இயக்கமாக**; பொதுமக்களுக்குரிய பேய்நிலைகளையும், நோய்

நிலைகளையும், தேய்நிலைகளையும், மாய்நிலைகளையும், ஓய்நிலைகளையும், நாள், கோள், மீன், பாதிப்பு நிலைகளையும், உருவ அருவப் பாதிப்பு நிலைகளையும், ஊழ்வினை, சூழ்வினை, ஆள்வினை, விதி முதலியவற்றின் பாதிப்புக்களையும் அகற்றக் கூடிய **மந்திர நாயகங்களின் இயக்கமாக**; பேய்களையும், பிசாசுகளையும், பில்லி, சூனியம், செய்வினை, வைப்பு, கழிப்பு, மருந்து, ஏவல் முதலியவைகளையும் அடித்து விரட்டக் கூடிய **தாந்தரீக, ஏந்தரீகப் பூசை நாயகங்களின் இயக்கமாக**வும் வெளிப்படையாகச் சொல்லியும், அச்சிட்ட நூல்களாகவும், அறிக்கைகளாகவும் வெளிப்படுத்தியும், ஆயிரமாயிரம் சித்தரடியான்கள், அடியாள்கள், அடியார்கள் மூலம் செயலாக்கிக் காட்டியும் நெடுங்காலமாக இலைமறைகாயாகவே செயல்பட்டு வருகிறோம்.

எனவேதான், சமுதாயப் பெரியார்களுக்கும், மொழிப் பேறறிஞர்களுக்கும், அரசியல் வித்தகர்களுக்கும், மதத் தலைவர்களுக்கும் ஏற்பட்டது போன்ற வாரிசற்ற நிலையோ! அல்லது வரலாறற்ற நிலையோ! அல்லது தோல்விகள் மிகுந்த நிலையோ! என்றைக்கும் எமக்கோ, எமது சாதனைகளுக்கோ, போதனைகளுக்கோ ஏற்பட்டிடாத நிறை வாழ்வு, மறை வாழ்வு, முறை வாழ்வு, நெறி வாழ்வு, வேத வாழ்வு, சித்த வாழ்வு, நாத வாழ்வு, போத வாழ்வு, ஓத வாழ்வு, சுருதி ஆரண ஆகம மீமாம்சையின் சார வாழ்வு, அத்திறம், ஏத்திறம், சாத்திறம், சூத்திறம், தோத்திறம், நேத்திறம், வேத்திறம் முதலியவைகளின் சாரவாழ்வு .... என்று பட்டியலிட்டால் கூட அடங்காத சரித்திர வாழ்வு வீரகாப்பியமாகும்படி வாழுகிறோம் யாம். எமது இணையில்லாத துணையாகிறீர்கள் தாங்களும், தங்களைப் போன்றவர்களும், நம்மவர்களும், அனைவருமே. என்றென்றும் தமிழ் நெஞ்சங்களால் மறக்கப்பட முடியாததும், தமிழ்ச் சிந்தைகளால் துறக்கப்பட முடியாததுமான இறவாமையும், பிறவாமையும் பெற்ற

அறவாழ்வு பெற்றவர்களாவோம் நாம் என்ற நினைவினை அகற்றுமல் வாழுகிறவர்களாகிடல் வேண்டும் நம்மவர்கள். அதற்குத் தங்களைப் போன்றவர்களின் அறிவுரைகளும், அருளுரைகளும், அயராத உழைப்பும்தான் தேவை, தேவை, தேவை. இத்தேவையினைத் தாங்கள் நிறைவேற்றித் தர வேண்டும் என்று அன்பு வேண்டுகோளை விடுத்துக் கொள்கிறேம் யாம்.

நண்ப! செயல்வீர! சிந்தனைச் செல்வ! அன்பு கூர்ந்து நம்முடைய அச்சிட்ட அறிக்கைகளையும், அறிவிக்கைகளையும், புத்தகங்களையும் பல ஊர்களிலும், பல இடங்களிலும் படிப்பகங்கள் மூலம் பலரும் படித்தறியுமாறு செய்திடுங்கள். ஏற்கனவே, நம்மிடமுள்ள கையெழுத்துப் பிறதிகளுக்கும், யாம் அனுப்பும் கட்டுரைகளுக்கும், அஞ்சல்களுக்கும், நம்மோடு தொடர்புடைய அனைத்து ஆண்களையும், பெண்களையும் நகல் எழுதிடும் பணியில் ஈடுபடுத்திடுங்கள். அப்படி கிடைத்திடக் கூடிய நகல்களை முடிந்தவரை சிறுசிறு கட்டாகக் கோப்பாக்கி (Bindings) நாடெங்கும் அனுப்பிடுங்கள். அப்பொழுதுதான், அவற்றின் மூலம் **கருத்து வளர்ச்சியும், தத்துவப் புரட்சியும், சித்தாந்தச் செயல்மலர்ச்சியும் விளைந்திடும், விளைந்திடும், விளைந்திடும்**.

அன்பு கூர்ந்து இந்த முறையில் அயராது உழைக்க முற்படுங்கள். **<u>யாம், இன்னும் எவ்வளவு காலம் ஈர விறகுகளுக்கு இடையில் எரியும் கற்பூரச் சுடராக இருப்பது?!</u>** அதற்கோர் முடிவு ஏற்பட்டால்தான் நம்மவர்களுக்கு விடிவு ஏற்பட்டிடும். எனவே, <u>நம்மவர்கள் வெளிப்படையாகத் தெளிவோடும், எளிமையோடும் சுடுகாடுகளிலும், இடுகாடுகளிலும், புதைகாடுகளிலும், 48 வகையான வழிபாட்டு நிலையங்களிலும், கருவறைகளிலும், வெட்டவெளிக் கருவறைகளிலும் துணிந்து சன்னிதான உடையில் சென்று அனைத்து வகையான பூசைகளையும் செய்து மக்களுக்கு அருளை அநுபவப் பொருளாக வழங்கிடல் வேண்டும்</u>.

அதாவது, நம்மவர்கள் மக்களின் வாழ்க்கைத் துன்பங்களை விரைந்து அகற்றும் பணியில் பெருவீரம் காட்டிடல் வேண்டும். அந்த வீரத்தால் விளைந்திடும் வெற்றிகளின் மூலம்தான் மக்கள் நம் பக்கம் தாராள மனதுடன் ஏராளமாகச் சேர்ந்திடுவார்கள். அப்பொழுதுதான், நம் வளர்ச்சியை யாராலும் தடைப் படுத்த முடியாது, கட்டுப் படுத்த முடியாது. நமது இயக்கம் வளமாக, வானுற வளர்ந்திடும்.

அதன்பிறகு, சீவநெறியெனும் சித்தர் நெறியான இந்துமதத்தை மலர்ச்சியும், மறுமலர்ச்சியும், வளர்ச்சியும், வளவளர்ச்சியும் அடையுமாறு செய்திட முடியும், செய்திட முடியும், செய்திட முடியும். அப்பொழுதுதான், உலக முதல் மதமும், மூல மதமும், தாய் மதமுமான நமது இந்து மதத்தின் மூலம் இம்மண்ணுலகில் உள்ள அனைத்து மதங்களுக்கும், இனங்களுக்கும், மொழிகளுக்கும், பண்பாடுகளுக்கும் முழுமையான விடுதலை கிடைத்திடும். அந்த விடுதலையின் மூலம்தான் நமது இயக்கத்தின் கொள்கையான அல்லது பதினெண்சித்தர்களின் குறிக்கோளான அல்லது **மெய்யான இந்துமதத்தின் தத்துவமான உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைந்திடும். உலக ஆன்மநேய ஒருமைப்பாடு உருவாகிடும்**. எல்லோருடைய எல்லா விதமான உரிமைகளும், பெருமைகளும் பாதுகாக்கப் பட்டிடும், பாதுகாக்கப் பட்டிடும், பாதுகாக்கப் பட்டிடும். அத்தகைய நன்னாளை விரைவில் கொண்டு வருவதற்காக நாம் எல்லோரும் பாடுபட வேண்டும், பாடுபட வேண்டும், பாடுபட வேண்டும், பாடுபட்டேயாக வேண்டும்.

அதற்காக, இந்த அஞ்சலுக்கு விரைந்து தொடர்ந்து சில பேனா நகல்களையும், கார்பன் நகல்களையும் அனுப்பிடுங்கள். இந்த அஞ்சலை நம்மவர்கள் அனைவரிடமும் படித்துக் காட்டுங்கள். எல்லோரும்

தங்களுடைய அருமை பெருமைகளை உணர்ந்திட்டால்தான் தங்களுக்கு ஒத்துழைப்பை நல்குவார்கள்.

எனவே, கூச்சப்படாமல் பலருக்கும் இந்த அஞ்சலைப் படித்துக் காட்டுங்கள், படித்துக் காட்டுங்கள், படித்துக் காட்டுங்கள். யாம், அரச பாரம்பரியம் எழுதிக் கொண்டிருப்பதற்கிடையில், சந்தானுச்சாரியார்களின் வரலாற்றை எழுதிக் கொண்டிருப்பதற்கிடையில், தேவதேவியின் பரிந்துரையால் பல பூசாமொழிகளை எழுதிக் கொண்டிருப்பதற்கிடையில் ..... இந்த நெடிய அஞ்சலைத் தங்களுக்கு எழுதியிருக்கிறோம் என்றால், இந்த அஞ்சலின் சிறப்பைத் தாங்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். முடிந்தால் இந்த அஞ்சலை ஒரு தனிப் புத்தகமாகக் கூட அச்சிட்டுத் தரலாம். தங்களிடமிருந்து விரிவான பதிலை எதிர் பார்க்கிறோம்.

**அன்பு**

**குருமகா சன்னிதானம்,**

**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்.**

13/8/87 சனிக்கிழமை மணி 2.20 பகல்.

**//உண்மை நகல்//**

**//இக்கட்டுரையின் மூலம்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்த நகல்.//**

# அருளார்ந்த அறிவுரை

"…. மானுடர்களில் தேவர்கள், தேவகுமாரர்கள், தேவதூதர்கள் பிறப்பெடுத்துத் தொண்டாற்றுவது பதினெண்சித்தர்களின் அருட்பணித் திட்டமே. பதினெண்சித்தர்களின் நேரடி விந்து வழி வாரிசுகளால்தான் 'அறிவுரை', 'அருளுரை', 'அறிவார்ந்த அருளுரை', 'அருளார்ந்த அறிவுரை' வழங்க முடியும்! முடியும்!! முடியும்!!! இவற்றின் பயனாகத்தான் இந்திய மண்ணில் அருளாளர்கள் வாழையடி வாழையாகத் தோன்றிச் செயல்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள்.

'தமிழினம் அருளாளர்களின் தாய்'; 'தமிழ்மொழி அருளாளர்களின் விழி, உயிர், செயல், சிந்தனை…'; 'தமிழகம் ஒரு கடவுளர் நாடு'…. எனவேதான், தமிழர்களில் நாயன்மார்களும், ஆழ்வார்களும், மௌனிகளும், ஞானிகளும், தவசிகளும், மறையோர்களும், முறையோர்களும், நெறியோர்களும், வேதியர்களும், தவமுனிகளும், இருடிகளும், சித்தியாளர்களும்…. தோன்றிக் கொண்டே இருந்துங் கூட தமிழ் மக்களிடையே புதிய அருளாசையை, அளப்பரிய அருளார்வத்தை உருவாக்கவே முடியவில்லை. எந்த அற்புதமும், வியப்பும், மாயமும், மந்திர தந்திர எந்திரச் செயலும்…. தமிழர்க்கு வியப்பாக இருந்ததில்லை. இப்படிப்பட்ட தமிழர்களை ஒன்று திரட்டி ஒற்றுமைப் படுத்தினால்தான் 'உலக அருளாட்சி அமைக்க முடியும்! முடியும்!! முடியும்!!!'…."

**குருபாரம்பரிய வாசகம்.**

**10-11-82இல் ஞாலகுரு சித்தர் கருவூறார் புதுக்கோட்டை சித்தரடியான் S.கருப்பையா, சித்தரடியான் D.யோகராசு, பொற்பனைக் கோட்டை அருட்சேனைத் தளபதி அவர்களுக்கு விடுத்த அஞ்சலில் இருந்து எடுக்கப் பட்ட குருபாரம்பரிய வாசகம்.**

# இந்து மத வரலாற்றுப் பேருண்மைகள்

**பிறப்பிடம்:** இளமுறியாக் கண்டம் (The lost Lemuria) எனும் கடலுள் மறைந்த 'குமரிக்கண்டம்'.

**காலம்:** பதினெண்சித்தர்களால் அனாதிக் காலத்தில் அதாவது கி.மு.43,71,101ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

**மொழி:** தமிழ் மொழி.

**வழிபாட்டு நிலையம்:** 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சிவாலயங்கள்.

**இந்துமத நூல்கள்:**

| | | |
|---|---|---|
| பூசைமொழி நூல்கள் | - | 108 |
| பூசைவிதி நூல்கள் | - | 48 |
| தத்துவ நூல்கள் | - | 96 |
| செயல்சித்தாந்த நூல்கள் | - | 144 |
| குருபீட நூல்கள் | - | 36 |
| ஆக மொத்தம் | - | 432 நூல்கள். |

**இந்துமதப் பயன்கள்:** தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கையும் வடிவப்படுத்தி வளமான வாழ்வு பெறச் செய்தல்.

**இந்து மதம் என்பது முன்னோர் வழிபாடு, மூத்தோர் வழி நடத்தல்.**

**அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு வகையிலும் வாழ்வது மத வாழ்வு.**

**அருவம், அருவுருவம், உருவ அருவம், உருவம் எனும் நான்கு வகை வழிபாடும் பயனுடையனவே.**

* **ஆதாரம்:** மூலப் பதினெண்சித்தர் பீடாதிபதி ஆதிசிவனாரின் குருபாரம்பரியம்.



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்** தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - 1279) உருவாக்கினர்.

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

---

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்), Arani, Thiruvallur Dt.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

www.newsletters.gurudevar.org
Email: indhuism@gmail.com